திரு. கே. ஏ. மதியழகன் : பல கேள்வித் தாள்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டியின் வேலைகள் மேலும் செம்மைப் படுவதற்கு சட்ட மன்றத்திற்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையில் இந்த விதிகள் பற்றிய ஒரு விவாதத்திற்கு இந்தச் சட்ட சபை தொடரிலேயே ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பூர்வாங்கமாக மார்ச் 31-ம் தேதி வரையில் எவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டு என்ன முடிவுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு எவ்வாறு அந்த முடிவுகள் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதுபற்றி எல்லாம் உள்ள தகவல்களை இந்த மன்றத்தில் தெரிவிக்கலாம் என்ற கருத்தை தெரிவித்தேன். அவ்வாறு தெரிவிக்கப்பட்டு அதற்கு மேல் விவாதம் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம், மன்ற அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ள எப்போதும் நான் ஆவல் உள்ளவனாக இருப்பேன்.

Revision of pension rates

*2 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to revise the rate of pension to the Madras State Pensioners in view of the rise in prices and living index ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Sir.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : ரூபாய் 20-க்கு குறைவாக ஊதியம் பெறுகிற ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஊதியத்தை உயர்த்துவதாக முதல் அமைச்சர் அவர்கள் பலமுறை கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் சில நாட்களில் அரசாங்கத்தின் முடிவை இந்த மன்றம் தெரிந்து கொள்ளும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஓய்வு ஊதிய அளவை குறைந்தபட்சம் 20 ரூபாய் என்று ஆக்குவதற்கான முயற்சியை அரசாங்கம் எடுக்குமா ? இப்போது 20 ரூபாய்க்கு குறைந்து ஓய்வு ஊதியம் பெறுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சாதாரணமாக முதியோர்களுக்கு 20 ரூபாய் கொடுப்பது என்ற முறையை வைத்திருப்பதால் அந்தத் துறையில் அதை எதிர்பார்க்கலாம். ஆகவே, 20 ரூபாய்க்குக் குறையாமல் ஓய்வு ஊதியம் கொடுக்கும் வழியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் 20 ரூபாய்க்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதென்று நான் முன்பே கூறினேன். சீக்கிரத்தில் முடிவு தெரிவிக்கப்படுமென்றும்

29th January 1966]

கூறினேன். முதியோர்களுக்கு 20 ரூபாய் கொடுப்பது என்றால், சில நிபந்தனைகளின் பேரில் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு வேறு சொத்து இல்லாமல் இருக்கவேண்டும்; இவ்வளவு வயது இருக்கவேண்டும்; வேறு வருமானம் இல்லாமல் இருக்கவேண்டும் என்றெல்லாம் இருக்கிறது. பென்ஷன் வாங்குகிறவர்களுக்கு வேறு வசதிகள் இருக்கலாம். பென்ஷன் வேண்டாம் எங்களுக்கு முதியோர் பென்ஷன் திட்டத்தின் கீழ் வந்தால் போதும் என்று அதற்கு அருகதை உள்ளவர்களாக இருந்தால் அதுவும் கருதப்படலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பென்ஷன் கொடுக்கப்படுவது அவர்கள் அரசாங்கத்திற்கு செய்த சேவைக்காக. அவர்கள் பதவியில் இருந்து விலகும் சமயத்தில் அவர்கள் எவ்வளவு பெற்றுக் கொண்டிருந்தார்களோ, அதற்கான விகிதாசாரப்படி கொடுக்கப்படுகிறது. விலைவாசி ஏறிக் கொண்டே போவதால் சம்பளத்தின் மதிப்பு குறையும்போது பென்ஷனின் மதிப்பும் குறைகிறது. அதை உத்தேசித்து இதை மறுபரிசிலனை செய்ய உத்தேசமுண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தப் பிரச்னை அப்போதைக் கப்போது அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிற விஷயம். ஒரு முறை இது ஓரளவுக்கு உயர்த்தப்பட்டும் இருக்கிறது. மேலும் உயர்த்துவது என்பதுதான் பிரச்னை. தற்காலம் அம்மாதிரி முடிவு செய்வதாக இல்லையென்று கூறினேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு கணவனுக்குப் பிறகு மனைவிக்கு பென்ஷன் கொடுக்கப்படுகிறது. நம் அரசாங்கத்திலும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் மனைவிகளுக்கும் அதுபோன்று பென்ஷன் கொடுக்க உத்தேசமிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு கூறியதை விட வேறு ஒன்றும் தகவல் என்னிடம் இல்லை.

Laboratories in Secondary Schools

* 3 *Q.*—Sri V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to push through a "Crash Programme" for strengthening and improving Science Laboratories in Secondary Schools in the State; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The Government of India have sanctioned grants at the rate of Rs. 4,000 per school under the Crash Programme for the improvement of Secondary Education as follows:—

	Rs. in lakhs
1964–65	6.39
1965–66	9.53